# எமது தேசத்திற்கும் அதனது மக்களுக்கும் செழுமையைப் பெற்றுத்தர நாம் ஒரு பயணத்தில் இருக்கின்றோம். நீங்கள் அதனொரு பங்காளராக இருக்க விரும்புகிறீர்களா???

இலங்கையின் முன்னணி அரச அபிவிருத்தி வங்கியான பிரதேச அபிவிருத்தி வங்கியானது நாடு முழுவதும் 272 கிளைகள் மற்றும் 3000 இற்கும் மேற்பட்ட திறமையான ஊழியர்களைக் கொண்டு செயற்படுகின்றது என்பதுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடத்திற்குத் தேவையான தகைமைகளுடன், சிறந்த தலைமைத்துவப் பண்புகளைக் கொண்ட தொழில் வல்லுநர்களிடமிருந்து, விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பிரதான உள்ளக கணக்காய்வாளர் (CIA)

**முக்கிய தேவைகள்**

- ஆகக் குறைந்தது பின்வருவனவற்றில் ஒன்றில் தொழில் நிபுணத்துவ உறுப்புரிமை.
  - அ) இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனம்
  - ஆ) இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் பட்டய கணக்காளர் நிறுவனம்
  - இ) சான்றளிக்கப்பட்ட இங்கிலாந்து கணக்காளர் கழகம்/சங்கம்
  - ஈ) சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர் இங்கிலாந்து/இலங்கை அல்லது வேறு எந்தவொரு தொழிற்சார் தகைமை
- சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் (தலைமை முகாமையாளர் அல்லது அதற்கு மேற்பட்ட நிலைக்கு இணையானதாகவும் அதில் 5 வருடங்கள் உதவி பொது முகாமையாளர் அல்லது அதற்கு மேற்பட்ட நிலை) 8 வருட அனுபவம் பெற்றிருப்பதுடன் அதில் 5 வருடங்கள் வங்கி அல்லது நிதி நிறுவனம் ஒன்றில் உள்ளக கணக்காய்வு பிரிவுடன் தொடர்புடைய அனுபவம் இருத்தல் வேண்டும்.
- தகவல் தொழிநுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட கணக்காய்வுத் தொழில் நுணுக்கங்களுடன் கையாளக்கூடிய சிறந்த அனுபவம்.
- ஆளணி முகாமைத்துவம் பற்றி நிரூபிக்கப்பட்ட தள தடங்களுடன் சபை மட்டத்தில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடக்கூடிய ஆற்றல்.
- வங்கித் துறையில் கூட்டாண்மை ஆளுகை நடைமுறைகள் பற்றிய பரிச்சயம் மற்றும் சர்வதேச நிதியறிக்கைகள் அறிக்கையிடல் நடைமுறை (IFRS) அறிவியலுடனான பிரகடனப்படுத்தக்கூடிய தேவைப்பாடுகள்.
- வயது- 56 வருடங்களுக்கு குறைவானதாக இருத்தல் வேண்டும்.

## பிரதான இடர் முகாமைத்துவ அதிகாரி (CRO)

**முக்கிய தேவைகள்**

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலான பட்டத்துடன் பட்டப்பின்படிப்பு தகைமையுடன் அல்லது வங்கியியலில் நிபுணத்துவ தகைமை
2. ICASL / ICA (England and Wales) / ACCA(UK) / CMA (UK)/(SL)இலான தொழில் நிபுணத்துவ உறுப்புரிமை.

- சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் (தலைமை முகாமையாளர் அல்லது அதற்கு மேற்பட்ட நிலைக்கு இணையானதாகவும் அதில் 5 வருடங்கள் உதவி பொது முகாமையாளர் அல்லது அதற்கு மேற்பட்ட நிலை) 8 வருட அனுபவம் பெற்றிருப்பதுடன் அதில் 3 வருடங்கள் வங்கி அல்லது நிதி நிறுவனம் ஒன்றில் இடர் முகாமைத்துவம்/ நிதி/ கணக்காய்வு பிரிவுடன் தொடர்புடைய அனுபவம் இருத்தல் வேண்டும்.
- கடன் மதிப்பீடுகள் மற்றும் அங்கீகரிக்கும் நடைமுறைகள் பற்றிய பரிச்சயம் மேலதிக அனுகூலமாக கொள்ளப்படும்.
- வயது 56 வருடங்களுக்கு குறைவானதாக இருத்தல் வேண்டும்.

**சேவை நிபந்தனைகள்**

03 வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்டு வருடாந்தம் செயற்றிறன் மதிப்பீடு மேற்கொள்ளப்படும் குறித்த பதவியானது நிறுவன முகாமைத்துவ (பிரதி பொது முகாமையாளர் தரத்திற்கு இணையான) பதவி நிலையாகும்.

**சம்பளம்/கொடுப்பனவுகள்**

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிக்கு கவர்ச்சிகரமானதும் பேசித்தீர்மானிக்கக்கூடியதுமான சம்பள பொதியானது தகைமைகள் மற்றும் முன்னனுபவங்களுக்கு ஏற்ப பெற்றுக் கொடுக்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

பூர்த்தி செய்யப்பட்ட உங்களது முழுமையான சுயவிபரக் கோவையை, உறவினரல்லாத சிபாரிசு செய்யும் இருவரின் தொடர்பு விபரங்களுடன் 2024 டிசெம்பர் 24ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய விடயத்தலைப்பில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு, careers@rdb.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டிராத அல்லது பிழையான தகவல்களை கொண்டிருக்கும் எந்தவொரு விண்ணப்பப்படிவமும் ஆட்சேர்ப்பு படிமுறையின் எக்கட்டத்திலும் எவ்வித முன்னறிவித்தல்களும் இன்றி நிராகரிக்கப்படும். சிறுபட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரிகளை மாத்திரம் அழைப்பதற்கு அல்லது ஒத்திவைப்பதற்கு அல்லது ஆட்சேர்ப்பை இரத்துச் செய்வதற்கு வங்கிக்கு முழுமையான அதிகாரம் உண்டு.

ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Regional Development Bank

பிரதான மனிதவள அதிகாரி
பிரதேச அபிவிருத்தி வங்கி.
இல.933, கண்டி வீதி, வெதமுல்ல, களனி.
0112 03 54 54 | www.rdb.lk